07.11.2022

OS 111/2020

PW1 – பிரின்சி மார்டின்

வாதி தரப்பு சாட்சி 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் சகோதரர் என் பெயரில் OS 1269/2016 – PDM, Trichy யில் தாக்கல் செய்த பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அதன் பிறகு தான் நான் OS 393/2017 என்ற வழக்கை I ADM, Trichy யில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரி. OS 1269/2016 வழக்கானது என் பெயர், என் தாயார் பெயர் மற்றும் சார்பதிவாளர் ஆகிய மூவர் பெயரிலும் தான் போடப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் plot no 13 ஐ என் தாயார் எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்தார் என்றால் சரி. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்பதிவாளர் அலுவலத்திற்கு சென்ற பிறகு எந்தவித தடை உத்தரவும் இல்லை என்ற பிறகு எழுதி வாங்கப்பட்டது என்றால் சரி. என் தாயார் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தபோது நல்ல உடல் மற்றும் மனநிலையில் இருந்தார் என்று நான் எனது பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறி உள்ளேனா என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை அவர் நன்றாக தான் இருந்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் எதற்காக எனக்கு செட்டில்மெண்ட் டீட் எழுதி கொடுத்தார் என சொல்லவில்லை என்றால் சரி. OS 1269/2016 வழக்கில் நான் தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் எனவும் அதை என் தாயார் அடாப் செய்துகொண்டார் என்றால் சரி. எதிர் வழக்குரையை அந்த வழக்கில் நான் 14.07.2017 ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. பாதையை எழுதி வாங்கிய பிறகு தான் மேற்படி வழக்கு என்றால் என் தாயாராகவே எழுதி கொடுத்தார். OS 1269/2016 வழக்கை எனது சகோதரர் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல்

செய்துள்ளார் வாசாஆ 5 சாட்சியிடம் கொடுக்கப்பட்டு கேட்கப்பட்டதற்கு தாவா சொத்து வாதியின் தகப்பனார் SAA நாதனால் அவருடைய பணத்தை கொண்டு 1ம் பிரதிவாதி JVA நாதன் பெயரில் வாங்கப்பட்டது எனவும், எனவே அது முழுமையாக அவருக்கு பாத்தியப்பட்டது என கோரி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் 14.02.2020ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வாசாஆ 13க்கு 11.03.2020 தேதியில் பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு வாசாஆ 14 அனுப்பப்பட்டது என்றால் சரி. வாசாஆ 13 பத்தி 7ல் Since you began to act detriment to the interest of my client, my client hereby revokes the permission granted to you to reside in the 1st floor of the premises என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. வாசாஆ 13ல் எந்த தினத்தில் தேதி, மாதம், வருடம் வசிக்க அனுமதித்தேன் என்ற விவரம் அதில் சொல்லப்படவில்லை என்றால் சரி. அனுமதி ரத்து செய்த தேதி, மாதம், வருடத்தையும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரி. தாவா சொத்துகளில் எனக்கும் என் சகோதரருக்கும் கூட்டுரிமை உள்ளது என்றால் தவறு. என் அம்மாவுடைய சொத்து அவர் விருப்பத்தின் பேரில் தான் செட்டில்மெண்ட் டீட் எழுதி வைத்தார். எங்களுடைய இள வயது காலத்தில் எனக்கும் எனது சகோதரருக்கும், என் தாயார் தகப்பனார் ஆகியோருக்கு இடையே நல்ல புரிதல் உணர்வு இருந்து வந்தது என்றால் சரி. என் திருமணம், என் மூத்த சகோதரரின் திருமணத்திற்கு முன்பு வரை அனைவரும் ஒரே குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரி. சகோதரர் தன் திருமணத்திற்கு பின்னிட்டும் தாவா சொத்தில் வசித்து வந்தார் என்றால் தவறு. என் சகோதரரின் மனைவி தனி வீட்டில் வசிக்க வேண்டும் என்பதன் காரணத்தினால் என் சகோதரர் தன் மனைவியுடன் மன்னாபுரத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தார். என் பிரசவத்திற்கும், அவ்வபோது விஷேசத்திற்கும்

திருச்சி தாவா சொத்திற்கு வந்து செல்வேன். என் சகோதருக்கும் அவருடைய பெற்றோருக்கும் இடையே எந்த வித கருத்து வேறுபாடு இருந்தது கிடையாது என்றால் என் பெற்றோர் இருவரும் கடைசி வரை என் சகோதரரிடம் அடி வாங்கி உள்ளார்கள். சகோதரின் மனைவி மற்றும் குழந்தைகள் கூட என் தயாரை அடித்து துண்புறுத்தி வந்தார்கள். மேற்கண்ட விவரங்களை நான் பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லையா என்றால் எனக்கு அவசியம் ஏற்படவில்லை அதனால் சொல்லவில்லை. பெற்றோர் சகோதரரால் தாக்கப்பட்டது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து FIR உள்ளது ஆனால் நான் தாக்கல் செய்யவில்லை. என் கணவருக்கு 4 சகோதரிகள் என்றால் சரி. என் கணவர் மற்றும் சகோதரிகள் மீது DV 12/2021 என்ற எண்ணில் சைதாப்பேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரி. மேற்படி DV வழக்கு குறித்து எதிர் வழக்குரையில் தெரிவிக்காத காரணத்தினால் வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது. எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்பு DV வழக்கு தாக்கல் என்று பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டது. எனக்கு 1979 ல் திருமணம், என் சகோதரருக்கு 1981 ல் திருமணம் என்றால் சரி. பிளாட் நம்பர் 12 ஐ 1976 லேயே எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரி. நல்ல நிலைமையில் சுமூகமாக குடும்பம் நடைபெற்று வந்தது என்றால் சரி. சுமூகமாக குடும்பம் நடைபெற்று வந்த நிலையில் பிளாட் நம்பர் 12 பாதையை நான் எழுதி வாங்கிவிட்டேன் என்றால் தவறு, என் தாயார் எழுதி தரப்பட்டது. ஏற்கனவே பாதையை கண்வீனியன்டாக பயன்படுத்தி வந்த பட்சத்தில் எந்த இடையூறுகள் ஏற்பட்டது, பாதையை எழுதி வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரி. அதன் பின் தான் எனக்கும் என் சகோதரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் இல்லை. அதன் பின் தான் OS 1269/2016 தாக்கல் என்றால் தவறு. என் பெற்றோருக்கு நானும் என் சகோதரரும் தான் வாரிசுகள் எனும் பொழுது இருவருக்கும் ஒரு ஒரு வீடு என்று உள்ள பொழுது நான் என் சகோதரருக்கு ஒதுப்பட்ட சொத்தை எழுதி

வாங்கினேன் என்றால் தவறு. என் தகப்பனார் இறந்த பிறகு என் தகப்பனாரால் என் தாயார் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்தை நான் செட்டில்மெண்டாக எழுதி வாங்கி கொண்டேன் என்றால் தவறு. கிராபோட்டில் உள்ள ஒரு சொத்தை என் தகப்பனாருக்கு சொந்ததமாக இருந்த சொத்தை என் தாயார் எனக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் தவறு. என் அம்மாவே வெவ்வேறு நபர்களுக்கு பிரித்து விற்றுவிட்டார். என் தூண்டுதலின் பேரில் தான் என் தாயார் அந்த சொத்துக்களை விற்றார் என்றால் தவறு. என் தாயாரின் விருப்பமும் என் சகோதரருக்கு ஒரு வீடு இருக்க வேண்டும் என்பது தான், நான் அவரின் வயது முதிர்வை பயன்படுத்தி நான் செட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் தவறு. அவ்வாறு செட்டில்மெண்ட் டீட் எழுதி வாங்கி கொண்டு தவறான தகவல்களோடு இந்த வழக்கு தாக்கல் என்றால் தவறு. இரண்டு வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் வழக்காடுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. சுமூகமான முறையில் குடும்பம் நடந்து வந்த நிலையில் செட்டில்மெண்ட் டீடை நான் எழுதி வாங்கி இந்த வழக்கை உண்மைக்கு புறம்பான சங்கதிகளோடு தாக்கல் செய்து அதற்கு ஏற்றவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் என் சகோதரர் அனைவரும் கூட்டுரிமை பாத்தியம் உடையவர்கள் என்றால் தவறு. என் சகோதரருக்கு உள்ள கூட்டுரிமை பாத்தியத்தை நிலைநாட்டுவதற்கு தான் அவரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. அந்த வழக்கு நிலுவையில் உள்ள போதே நான் சொத்தை எழுதி வாங்கி கொண்டு அனுமதியின் பேரில் பிரதிவாதிகள் குடியிருந்து வருவதாக சொல்லி பொய் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் கோருகிறேன் என்றால் தவறு. பிரதிவாதிகள் வம்சா வழியாக தாவா சொத்தில் கூட்டுரிமை பாத்தியத்துடன் வசித்து வருகிறார்கள் என்றால் தவறு. அனுமதியின் பெயரில் தான் இறந்த என் சகோதரர் தாவா சொத்தில் குடியிருந்து

வருகிறார் என்பது வழக்கிற்காக சொல்லப்படுவது என்றால் தவறு, சகோதரரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் என்றால் தவறு.